109—

மாணவர் விடுதி

***16293—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள ஆயங்குடிபள்ளம் மற்றும் கொள்ளிடம் பகுதியில் படிக்கும் ஆதி திராவிட மாணவர்களுக்கு ஆயங்குடிபள்ளத்தில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) புதிய விடுதிகள் தொடங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்தில் அதிக அளவில் ஆதி திராவிட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். குலசேகரபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியிலும், கோதண்டபுரம் இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளியிலும், ஆயங்குடிபள்ளம் வெங்கடேசா மேல்நிலைப் பள்ளியிலும் ஆதி திராவிட மாணவர்கள் கிராமங்களிலிருந்தும், நீண்ட நெடுந்தூரம் நடந்து சென்றும், சைக்கிளில் சென்றும், பள்ளியில் படித்து வருகின்றனர். மேற்கண்ட ஆதி திராவிட மாணவர்கள் தங்கிக் கல்வி பயில்வதற்கு, கொள்ளிடம் பகுதியிலுள்ள ஆயங்குடிபள்ளத்தில் ஓர் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதியை அடுத்த நிதி ஆண்டிலாவது மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அனுமதியைப் பெற்று, புதியதாக ஆரம்பித்து, கட்டடம் கட்டிக் கொடுக்கவும், ஆதி திராவிட மாணவர்களுக்குக் கட்டிக் கொடுத்துள்ள புதிய கட்டடத்தில் கூடுதலாக மாணவர்களைச் சேர்க்க மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசு முன்வருமா எனவும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2004 ஜூலை 31]

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் 1,076 மாணவ, மாணவியர் விடுதிகளும், பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு 26 விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. இதிலே 574 விடுதிகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தன. மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, கடந்த மூன்று ஆண்டுகளில் 366 விடுதிகள் அரசு சொந்தக் கட்டடங்களாகக் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கான செலவு ரூ.115.29 கோடி ஆகிறது. நடப்பாண்டில் 100 வாடகை விடுதிகளை அரசு சொந்தக் கட்டடங்களாகக் கட்டுவதற்கு, ரூ.31.50 கோடி செலவில் புதிய கட்டடங்களை தாட்கோ மூலம் கட்டுவதற்கு, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அனைத்து விடுதிகளிலும், உண்டு உறைவிடப் பள்ளி, தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்திவரும் விடுதிகளிலும் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியர்களின் உணவுக் கட்டணத்திற்கு, ஒரு மாணவருக்கு ரூபாய் 300 ஆக உயர்த்தி வழங்கி வருவதன் காரணமாக, ஓர் ஆண்டுக்கு ரூபாய் 39.11 கோடி செலவாகிறது. தற்போதைய நிலையில் திட்டம் சாராச் செலவினங்களையும் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் காரணமாகவும், தொடர் செலவினம் ஏற்படக்கூடிய எந்த ஒரு செயற்குறிப்பினையும் ஏற்க இயலாத நிலை உள்ளதால், நாகப்பட்டினம் மாவட்டம், ஆயங்குடிபள்ளத்தில் புதியதாக ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி ஆரம்பிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனவே, இங்கு புதிய கட்டடம் கட்டும் கேள்வி எழவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையில் உள்ளவாறு, பல இடங்களில் மாணவர்கள் விடுதியில் தங்கிப் படிக்க விரும்புகின்றனர். காரணம், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் கட்டப்பட்ட விடுதிகள் ஆரோக்கியமான சூழ்நிலையில் அனைத்து வசதிகளோடு பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டு மாளிகைபோல் நல்ல முறையில் பராமரிக்கப்படுவதாலும், மாணவர்களுக்கு உணவுக் கட்டணத்தை 300 ரூபாயாக உயர்த்தி, சுத்தமான, சுவையான உணவு வழங்கப்படுவதாலும், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் தங்கள் குழந்தைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டிய விடுதிகளில் சேர்த்துப் படிக்க வைக்க ஆவலோடு வருகிறார்கள். அனைத்து மாவட்டங்களிலும் கூடுதலாக மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகளையும்,

மாணவ, மாணவியர்களின் விருப்பத்தையும் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு செல்வோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பொன்னம்பலம்.

திரு. ப. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே என்னுடைய தொகுதியில்தான் அதிகமான மாணவர் விடுதிகள் உள்ளன. அதிலும் குறிப்பாக, மதுரை மாவட்டத்திலுள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் மாணவ, மாணவியர்கள், பிற மாவட்டங்களிலிருந்து சுமார் ஏழு மாவட்டங்களிலிருந்து வந்து இங்கே பயில்கிறார்கள். அவர்களுக்கு விடுதியில் இடம் கிடைக்காததால் நிறைய மாணவர்கள் சிரமப்படுகிறார்கள். இந்த ஏழு மாவட்டங்களிலுள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அந்த மாணவர்களுக்குப் பரிந்துரைக் கடிதங்கள் கொடுத்துள்ளார்கள். நிறைய மாணவர்களுக்கு இடம் கிடைக்காததால் சிரமப்படுகிறார்கள். ஆகவே, விடுதிகளில் மாணவர் எண்ணிக்கையைக் கூட்டித் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதில் இந்தக் கேள்விக்கும் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மகாலிங்கம்.

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், அனைத்து மாணவர்களுக்கும் இலவச bus pass மற்றும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் என அனைத்து மாணவிகளுக்கும் இலவச மிதிவண்டிகள் என்று கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதற்காக முதலிடம் கொடுத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில், அவினாசி தொகுதிக்குட்பட்ட சேவூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். அதில் முன்னூறுக்கும் மேற்பட்ட ஆதி திராவிடர், அருந்ததிய மாணவியர்கள், மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

2004 ஜூலை 31]

ஆகவே அவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக—தங்கிப் படிப்பதற்கு மாணவர் விடுதி இல்லாமல், மாணவர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே—ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக அடுத்த ஆண்டிலாவது அரசு மாணவர் விடுதி கட்டித் தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு செல்வோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 110, திரு. இரா. இராம் பிரபு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

110—

மாணவர் விடுதி

***36518—திரு. இரா. இராம் பிரபு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகரில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பரமக்குடியில் ஏற்கெனவே மாணவர் விடுதி ஒன்றும், மாணவியர் விடுதி ஒன்றும் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருவதால், புதியதாக மாணவர் விடுதி அமைக்கத் தேவை ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 111, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS